# Games in Sangam Literature: Vattadal, Kazhangaduthal, Oonchaladuthal, Kilikiliyadal

**N. Sundaramoorthy**
*Professor, Department of Tamil*
*Periyar University, Salem*

**K. Kavitha**
*Part-time Ph.D. Research Scholar, Department of Tamil*
*Periyar University, Salem*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255556

**Abstract**

*Through the Sangam literature, the citizens knew the technique of strengthening the body and thereby balancing the mind. All the games played by the people during the Sangam period are still in existence today. Games are used for mental strength, physical strength, entertainment and happiness. From children to adults, they have chosen games according to their preferences and have been playing them happily. In that regard, the purpose of this article is to identify evidence of games such as vattadal, kazhangadtal, kilikiliadal, and oonjaladtal from the eight-volume works such as Natrinai, Aingurunuru, Paripadal, Akananur, Purananur and Patuppattu from the eight-volume works and Porunaratrupada, Sirupanatrupada, and Perumpanatrupada.*

***Keywords:*** *Sangam Literature, Vattadal, Kazhangaduthal, Kilikiliyadal, Oonchaladuthal, Traditional Games, Social History*

**References**

1. Kaumariswari. S., (Ed.), Kaura Tamil Dictionary, Saradha Publications, Royapettah, Chennai, 2003.
2. Dr. Ku. Ve. Balasubramanian (Ed.), Sangam Literature, New Century Book House, Ambattur, Chennai, 2004.
3. Su. Vidhyanandhan, Tamil Culture, Pari Book Depot, Chennai, 1985.
4. Dr. Su. Sakthivel, Folklore Studies, Manivasagar Publications, Chennai, 2007.
5. A. Sa. Gnanasambandham, Thiruvasagam - Some Thoughts (Volume-1), Kavitha Publications, T. Nagar, Chennai, 2011.

# சங்க இலக்கியங்களில் வட்டாடல், கழங்காடுதல், ஊஞ்சலாடுதல் கிலிகிலியாடல்

*முனைவர் ம. சுந்தரமூர்த்தி*
பேராசிரியர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக் கழகம், சேலம்

*க. கவிதா*
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக் கழகம், சேலம்

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியப் பாடல்களின் வழி குடி மக்கள் உடலினை உறுதியாக்கிக் கொண்டு அதன் மூலம் மனதினைச் சமநிலைப்படுத்தும் நுட்பத்தினை அறிந்திருந்தனர். சங்க காலத்தில் மக்கள் விளையாடிய விளையாட்டுகள் அனைத்தும் இன்றளவும் நிலவி வருகின்றது. விளையாட்டு என்பது மனஉறுதிக்காகவும், உடல் உறுதிக்காகவும், பொழுது போக்கிற்காகவும், மகிழ்ச்சிக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அவரவர்களின் விருப்பத் திற்கு ஏற்ற வகையில் விளையாட்டுகளைத் தேர்ந்தெடுத்து மகிழ்ச்சியாக விளையாடி வந்துள்ளனர். அந்த வகையில் எட்டுத்தொகை நூல்களில் இருந்து நற்றிணை, ஐங்குறுநூறு, பரிபாடல், அகநானூறு, புறநானூறு மற்றும் பத்துப்பாட்டு நூல்களில் இருந்து பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை போன்ற நூல்களில் வட்டாடல், கழங்காடுதல், கிலிகிலியாடல், ஊஞ்சலாடுதல் ஆகிய விளையாட்டுகள் குறித்த சான்றுகளை அடையாளப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.*

## முன்னுரை

சங்ககால வரலாற்றில் விளையாட்டு என்பது மக்கள் மத்தியில் தவிர்க்க முடியாத அங்கமாக விளங்கி வருகின்றது. சிறுவர், சிறுமியர், மகளிர், இளையோர் மற்றும் முதியோர் என அனைவரும் பலவகையான விளையாட்டுகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வந்தனர். குடிமக்கள் ஓய்வு நேரத்தையும்,தங்களின்உடலினைஉறுதியாக்கிக் கொள்ள பல்வேறு விளையாட்டுகளை விளையாடி வாழ்ந்தனர். ஆற்றங்கரை யோரங்களிலும், மைதானங்களிலும், ஊர் எல்லைப் புறக்கோயில்களிலும் விளையாடிக் கொண்டிருந்த காலம் மாறிவிட்டது. தற்போதைய காலகட்டத்தில் விளையாடும் வழக்கம் பரவலாகக் குறைந்து வருகின்றது. அலைபேசி விளையாட்டுகளில் அனைவரும் மூழ்கி இருக்கின்றனர். இதனால் உடல் கூற்றில் தீங்கு ஏற்படுவதோடு மன உளைச்சலுக்கும் ஆளாகி வரும் நிலையினைக் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம். மக்கள் விளையாட்டுகளை வயதிற்கு ஏற்றார் போல் வடிவமைத்து விளையாடியுள்ளனர். சங்க இலக்கியப் பதிவுகளில் வட்டாடல், கழங்காடுதல், கிலிகிலியாடல், ஊஞ்சலாடுதல் ஆகிய விளையாட்டுக் குறிப்புகளை முன்வைத்துத் தெளிவுப்படுத்துவதே இக்கட்டுரை.

## வட்டாடல்

மக்கள் தங்கள் மகிழ்ச்சியை விளையாட்டின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். விளையாட்டு

என்பது அமைப்புடைய ஆட்டமாகவும் போட்டியை ஏற்படுத்துவதாகவும் வெற்றியை நிர்ணையிக்கும் விதிகளைக் கொண்டதாகவும் விதிகள் பொதுவாகப் பலரால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருக்க வேண்டும்[1] என்கிறார். சக்திவேல் (பக்.248). வட்டாடல் என்பது அக்காலத்தில் சிறப்புற்றிருந்த விளையாட்டுகளில் ஒன்றாகும். இதற்கென்று ஒரு இடத்தில் குச்சியை வைத்துக்கோடு வரைந்து காய்களை நகர்த்திவட்டாடுவர். திருவள்ளுவரும் கல்லாது கொட்டிகொளல் அரங்கின்றி வட்டாடுதலை ஒக்கும் என்றார். சங்க காலத்தில் சிறுவர்கள் வேப்பமரத்து நிழலில் நெல்லிக்காயை வட்டாகக் கொண்டு விளையாடியுள்ளனர். இதனை,

> **பொரி அரைவேம்பின் புள்ளிநீழல்**
> **கட்டளை அன்னஇட்டு அரங்கு இழைத்து**
> **கல்லாச்சிறா அர்நெல்லிவட் ஆடும்**
> **வில்ஏர் உழவர்வெம் முனைச்சீறூர்[2]**
> **(நற்றிணை.3:2-5)**

என்ற நற்றிணை வரிகள் மூலம் தெளிவாகிறது. பாறையில் உதிர்ந்து கிடந்த பளிங்கு போன்ற நெல்லிக்காய்களைக் கொண்டு விளையாடியதை அகநானூறு,

> **பளிங்கத்து அன்னபல் காய்நெல்லி**
> **மோட்டு இரும்பாறை ஈட்டுவெட்டுஏய்ப்ப[3]**
> **(அகநானூறு.5:9-10)**

என்று குறிப்பிடுகின்றது. வட்டாடுதல் 'வல்லாடுதல்' என்றும் வழங்கப்படும். வயது முதிர்ந்த பெரியவர் சூதாடு கருவியை இட்டு இட்டுக் குழிந்து போன இடம் பற்றிப் புறநானூறு பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> **கலிகெழு கடவுள்கந்தம் கைவிடப்**
> **பலிகண் மாறியபாழ்படு பொதியில்**
> **நரைமூதாளர் நாய் இடக்குழிந்த**
> **வல்லின் நல் அகம்[4]**
> **(புறநானூறு.52:12-15)**

என்றுவல்லாடுதல்விளையாட்டைப்பற்றிய செய்திகள்இந்தப்புறநானூறுபாடல்வரிகள் மூலம் கிடைக்கப் பெறுகிறது. சங்க இலக்கியத்தில் சுட்டப் பட்டுள்ள விளையாட்டுகள் மனநலம் போற்றக் கூடியதாக மட்டுமின்றி அனைவரிடமும் ஒற்றுமையை வளர்க்கும் ஓர் அரிய முயற்சியாகவும் இருந்துள்ளது. சிறுவர், சிறுமியர், ஆடவர் மற்றும் மகளிர் என அனைவருக்கும் தனி மற்றும் குழு விளையாட்டுகள் இருந்துள்ள செய்தியும் அறிய முடிகிறது. பொதுவாக விளையாட்டுகள் போட்டிக்காக மட்டும் நடத்தப்படும் ஒன்றன்று. வெற்றி தோல்விகளைச் சமமாகப் பாவிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவும் நடத்தப்படுவதாகும். விளையாட்டு என்பது வெளித்தூண்டல்களின்றி மகிழ்ச்சியூட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவதாகும். விளையாட்டை மனமகிழ்ச்சி ஊட்டும் செயல் என்பர். அவ்விளையாட்டு பொழுது போக்காக மட்டுமின்றி உடல்நலம், மனநலம் பேணுபவையாகவும் உள்ளது. விளையாட்டில் உடல்செயல்களின்றி உள்ளச் செயல்களும் இடம் பெறுகின்றன. குழந்தைகளின் இயல்புகளும் வெளிப்படுத்தப்படுகின்றன5 என்கிறார். சக்திவேல் (பக்.246). இந்த மனப்பான்மையானது வாழ்வியலைக் கற்றுக்கொள்ள உதவும் காரணியாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

**கழங்காடுதல்**

மகளிர் விளையாட்டுகளில் 'கழங்கு' என்பதும் ஒன்றாகும். இதனை பெண்கள் ஆடும் கழற்சிக்காய் ஆட்டம் என்று கௌரா தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. திண்ணை களில் பொன்னாலான கழங்கினை வைத்து விளையாடியதாகப் புறநானூறு குறிப்பிடுகிறது.

> **செறி அரிச்சிலம்பின் குறுந்தொடி மகளிர்**
> **பொலம் செய்கழங்கின் தெற்றிஆடும்[6]**
> **(புறநானூறு.36:3-4)**

கழங்காடுதலில் மகளிர் கூட்டாகவும் ஒற்றுமையாகவும்விளையாடி மகிழ்ந்திருந்த செய்திகள், சங்க இலக்கியப் பாடல்களில்

பல இடங்களில் காணமுடிகின்றது. தற்காலத்தில் இவ்விளையாட்டானது தட்டாங்கல் என அழைக்கப்படுகின்றது.

**ஊஞ்சலாடுதல்**

மரத்தின் கிளையில் கயிற்றினை ஊஞ்சலாகக் கட்டி அதில் அமர்ந்து ஆடிமகிழ்தல் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. அப்போது பாடப்படும் பாடல் ஊசல் வரியாகும். இதனை,

**பெருங்கயிறுநாலும் இரும்பனம்பிணையல்**
**பூங்கண் ஆயம் ஊக்க ஊங்காள்**[7]
**(நற்றிணை.90:6-7)**

என்ற நற்றிணைப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றது. குறிஞ்சிக் கலிபாடலில் தலைவியை ஊஞ்சலில் வைத்து ஆட்டிய தலைவனைக் காண்கின்றோம். அன்றைய காலத்தில் இருந்து இன்று வரை குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவரும் விரும்பக் கூடியது ஊஞ்சல் ஆகும். மேலும்,

**சீரார்பவளங்கால் முத்தங்கயிறாக**
**ஏராரும் பொற்பலகை ஏறிஇனிதமர்ந்து**
**நாராயணன் அறியாநாண் மலர்த்தாள் நாயடியேற்கு**
**ஊராகத்தந்தருளும் உத்தரகோசமங்கை**
**ஆராஅமுதின் அருள்தாளிணைப்பாடிப்**
**போரார் வேற்கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ**[8]
**(திருவா. திருப்பொன்னூசல் பா.16:1-6)**

என்று இறைவனுக்குப் பொன்னூசல் பாடியுள்ளதைத் திருவாசகம் பாடல் குறிப்பிடுகின்றது. இன்றைய காலங் கட்டடங்களிலும் கோயில்களில் ஆடி பதினெட்டாம் நாள் தெய்வத்திற்கு ஊஞ்சலாடல் நடைபெற்று வருகின்றது.

**கிலிகிலியாடல்**

சிறுவர்கள் கிலுகிலுப்பை (சிலுசிலுப்பை) என்னும் விளையாட்டுக் கருவியினால் ஒலியெழுப்பி விளையாடுதலை இன்றும் காணலாம். சங்க காலத்திலும் இம்மரபு இருந்தது என்று சிறுபாணாற்றுப்படை வழியாக அறிகின்றோம். உமணர்களோடு சென்ற குழந்தைகளைப் போன்று மந்தி முத்துகளைக் கிளிஞ்சல்களில் இட்டுக் குழந்தைகளோடு கிலிகிலியாடும் வளமார்ந்த நாடு பாண்டிநாடு என்கிறது. இதனை,

**நோன்பகட்டு உமணர் ஒழுகையொடுவந்த**
**மகாஅர் அன்னமந்திமடவோர்**
**நகாஅர் அன்னநளிநீர்முத்தம்**
**வாள்வாய் எருந்தின்வயிற்றகத்து அடக்கி**
**தோள்புறம் மறைக்கும் நல்கூர்நுசப்பின்**
**உளர்இயல்ஐம்பால் உமட்டியர் ஈன்ற**
**கிளர்பூண்புதல் வரொடுகிலிகிலி ஆடும்**[9]
**(சிறுபாண்.55-61)**

எனச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. மகளிர் ஈடுபடும் பல விளையாட்டுகளில் கடற்கரையில் இளமகளிர் சிற்றில் இழைத்து விளையாடும் வண்டல் விளையாட்டும் ஒன்றாகும். வண்டல் விளையாடும் இளமகளிரைப் பற்றிப் பொருநராற்றுப்படை,

**இளையோர் வண்டலயரவும்**[10]
**(பொருந.187)**

என்றும்,

**வண்டல் ஆயமொடு உண்துறைத்தலைஇ**[11]
**(பெரும்.311)**

என்று பாடுகிறது. வண்டல் இழைக்கும் ஆயத்தைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை விளக்குகிறது மேலும்,

**வண்டற்பாவை வரிமணல் அயர்ந்தும்**[12]
**(அகநானூறு.330:2)**

என்ற அகநானூற்றுப்பாடல் வரியில் பலரும் வந்து நீராடும் பெருந்துறைக் கண்மலரோடு பெருகி வந்த தண்ணீர் வண்டல் மணலைச் சிதைக்கும் என்கிறது. இச்செய்தி,

**பலர்ஆடு பெருந்துறை மலரொடுவந்த**
**தண்புனல் வண்டல் உய்த்தென**[13]
**(ஐங்குறுநூறு.69:2-3)**

என்ற ஐங்குறு நூறு பாடல் வரிகள் மூலம் விளக்கப் பெறுகின்றது. பலரும் வந்து

நீராடும் ஆறுகளில் மலரோடு பெருகி வந்த நீர்வண்டல் மனையைச் சிதைக்கும் என்பதனை,

**தமனியப் பொற்சிலம் பொலிப்ப உயர்நிலை**
**வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇ[14]**
**(பெரும்.332-333)**

பெரும்பாணாற்றுப்படை பாடல் மூலம் அறியமுடிகிறது. செல்வம் நிறைந்த மகளிர் பந்து விளையாடுவர். ஒளிமிக்க பொன்னாலான சிலம்பின் ஒலியோடு மாடத்தில் வரிப்பந்தாடியதைக் காணமுடிகிறது.

இக்கால மக்களிடம் வழக்கில் இருந்த பல்வேறு விளையாட்டுகள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை மகளிர் விளையாட்டுகளாக இடம்பெற்றுள்ளன. விளையாட்டுக்களம் - விளையாடுபவர்கள் - விளையாடும் காலம் - விளையாடும் கருவிகள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப் பெறுகிறது. புனலாடுதல், கழங்காடுதல் முதலான விளையாட்டுகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. மணல் பரந்த முன்றங்களில் ஆடப்படும் 'கழங்கு' மகளிரின் இன்னொரு விளையாட்டாகும். இவ்விளையாட்டில் பெண்கள் சிறிய உருண்டையான கற்களை மேலே எறிந்து புறங்கைகளில் ஏந்துவர். கழங்கு, பயிறு, உளுந்து போன்றவை ஒருவகைச் செடிகளாகும். அதன் விதைகள் இவ்விளையாட்டினில் பயன்படும். இப்பொழுது இவ்விளையாட்டு ஈழத்தின் வடகிழக்குப் பகுதிகளில் 'கொக்கான்' என வழங்கப்படுகிறது[15] என்கிறார் (சு. வித்தியானந்தன், தமிழர்சால் பு, ப.184) இக்காலத்திலும் சிறுமிகளும் முதுமகளிரும் இதனை விரும்பி விளையாடுவர். அவர்கள் பெரும்பாலும் ஏழுகற்களைக் கொண்டே ஆடுவர். இவ்வாட்டத்தைக் சொக்கான் வெட்டுதல் என்பர். நீர்விளையாட்டில் மகளிர்தம் தோழியருடனும், காதலனுடனும் விளையாடுவர். இதனை,

**கழைக்கண் நெடுவரை அருவிஆடி[16]**
**(புறநானூறு.251:4)**

என்ற புறநானூறு பாடல் வரியும்,

**குறுங்கோல் எறிந்த நெடுஞ்செவிக்குறு முயல்**
**நெடுநீர்ப்பரப்பின் வாளையொடு உகளுந்து**
**தொடலை அல்குல் தொடிந்தோள் மகளிர்[17]**
**(புறநானூறு.339:4-7)**

என்ற புறப்பாடல் வரிகளும் விளக்குகிறது. மூன்று நிலைகளில் புனல் விளையாட்டு இருந்துள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன. புனல் விளையாட்டின் போது பெண்கள் மெல்லிய ஆடைகளை அணிந்து நீராடியதைப் பரிபாடல்,

**புனல் மண்டி ஆடல் புரிவான் சனம் மண்டி**
**தாளித நொய்ந்நூல் சரணத்தர் மேகலை[18]**
**(பரிபாடல்.10:9-10)**

எனக் குறிப்பிடுகிறது. இது போல் நீருடன் தொடர்புடைய வண்டல் விளையாடுதலை,

**நடுங்கு அயிர்போழ்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்**
**வண்டற்பாவை சிதைய வந்துநீ**
**தோள்புதிது உண்டஞான்றை**
**சூளும் பொய்யோ கடல் அறிகரியே[19]**
**(அகநானூறு.320:11-13)**

என்று அகநானூற்றுப்பாடல் கூறுகின்றது. இது போன்று பல்வேறு விளையாட்டினைப் பற்றிய குறிப்புகளும் உள்ளன. மேலும் நீர் நிலைகளுடன் தொடர்புடைய நண்டு பிடித்து விளையாடும் வழக்கம் உண்டு. நண்டு பிறந்ததும் தாய் நண்டு இறந்துவிடும் என்ற குறிப்பினைத்

**தாய்சாப்பிறக்கும் புள்ளிக்களவனொடு**
**பிள்ளைதின்னும் முதலைத்து அவன்ஊர்[20]**
**(ஐங்குறுநூறு.24:1-2)**

எனும் பாடலடி தெரிவிக்கின்றது.

**அலவன் ஆட்டுவோள் சிலம்பு ஞெமிர்ந்து[21]**
**(நற்றிணை.363:10)**

என்ற நற்றிணைப் பாடலடி அலவனடி பற்றிக் குறிப்பிடுகின்றது. செம்மூதாலாட்டு என்னும் பெயரில் ஒரு விளையாட்டுப் இருந்துள்ளது. இதில் செம்மூதாய் என்பது தாம்பலப்புச்சி ஆகும். வண்டல்மணல்களில்

பாவை செய்து விளையாடுவதைப் பாவை விளையாட்டு என்பர். இதனை,

> **நடுங்கு அயிர்போழ்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்**
> **வண்டடல் பாவை சிதைசிதை இயவந்து**
> **தோள்புதிது உண்டஞான்றை[22]**
> **(அகநானூறு.320:11-13)**

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் விளக்குகின்றது. புல்லினால் பாவை செய்யும் மரபும் அக்காலத்தில் நிலவியுள்ளது. இன்றைய காலக் குழந்தைகள் தங்கள் கைகளில் செயற்கைப் பொருட்களைக் கொண்டு செய்யப்பட்டிருக்கும் பாவையை வைத்திருப்பது நாம் அறிந்ததே ஆகும்.

### முடிவுரை

சங்க இலக்கியங்களில் வட்டாடல், கழங்காடுதல், ஊஞ்சலாடுதல், கிலிகிலியாடல் ஆகிய விளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்துள்ளனர். வட்டாடல் என்பது ஓய்வு நேரங்களில் அரங்கம் அமைத்துக் காய்களை நகர்த்தி சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை விளையாடும் விளையாட்டாகும். கழங்காடுதல் என்னும் விளையாட்டு பெண்கள் காய்கள் வைத்து விளையாடுவதாகும். ஊஞ்சலாடுதல் என்பது கயிற்றை மரங்களில் கட்டி விளையாடுவதாகும். இது மனிதனுக்கு அப்பாறப்பட்ட இறைவனுக்கும் இன்று வரை தொடர்ந்து பக்திமையமாக நடைபெற்று வருகின்றது. சிறுவர்களுக்கு விளையாட ஒலியெலுப்பும் கருவிகளை அக்காலத்தில் பயன்படுத்தியுள்ளனர். மேலும் சிறுவர்கள் மணலில் சிற்றில் இழைத்தும், பாவைகளைச் செய்தும் மகிழ்ந்துள்ளனர். சங்க இலக்கிய நூல்களான நற்றினை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, புறநானூறு, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய சங்க நூல்களில் விளையாட்டுக்கள் முதன்மைப் பெற்றி இருப்பது சிறப்பிற்குரியதாகும். இத்தகைய விளையாட்டுகளைச் சங்க காலத்தில் வாழ்ந்திருந்த மக்கள் விளையாடியுள்ளனர் என்பதை அறிய முகின்றது.

### பார்வைநூல்கள்

1. கௌமாரீஸ்வரி.எஸ், (ப.ஆ), கௌரா தமிழ் அகராதி, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை, 2003.
2. முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியம் (உ.ஆ), சங்க இலக்கியம், நியு செஞ்சுரி புக்ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2004.
3. சு.வித்யாநந்தன், தமிழர்சால்பு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1985
4. முனைவர் சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2007.
5. அ. ச. ஞானசம்பந்தம், திருவாசகம் சில சிந்தனைகள் (தொகுதி-1), கவிதா பப்ளிக்கேஷன், தி. நகர், சென்னை, 2011.